**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS 134/2018**

**DW1- தமிழ்செல்வன்**

**த/பெ. காளியப்பன்**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of August 2024.)**

குறுக்கு விசாரணை (வாதி தரப்பு)

என் தகப்பனார் காளியப்பனும், வாதியின் தகப்பனார் சென்னியப்பனும் சகோதரர்கள் என்றால் சரிதான். என் தகப்பனாரும், சென்னியப்பனும் 1979 மற்றும் 1981-ம் ஆண்டுகளில் தாவா A ஷெட்யூல் சொத்தை இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் கிரையம் செய்து'கொண்டார்கள் என்றால் சரிதான். இரண்டு சொத்துக்களும் அவர்கள் சுயமாக சம்பாதித்து வாங்கியவை என்றால் சரிதான். B பட்டியல் சொத்தானது என் தாத்தா ராசாக்கவுண்டருக்கு பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டு, பின்பு என் தகப்பனார் காளியப்ப கவுண்டர் மற்றும் வாதியின் தகப்பனார் சென்னியப்பனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் என் அத்தை முத்தாயம்மாள் அவர்களுக்கும் பாத்தியதை வரும். A பட்டியல் சொத்துக்களை குருவாயி தோட்டம் என்றும் கொண்டாரெட்டி தோட்டம் என்றும் இருவகையிலும் சொல்வார்கள் என்றால் சரிதான். இந்த சொத்துக்களில் என் தாத்தா அப்பா ஆகியோர்கள் விவசாயம் செய்து வந்தார்கள் என்றாலும், நானும் அதில் விவசாயம் செய்து வருகிறேன் என்றாலும் சரிதான். வாய்மொழியாக பாகம் செய்து கொண்டு அதன் அடிப்படையில் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறோம் என்றால் இரண்டு, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நிலத்தை மாற்றிக்கொண்டு விவசாயம் செய்து வருகிறோம். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். தாவாச்சொத்தில் அபிவிருத்தி செய்ததாக சொல்லியிருக்கிறேன். நான் கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் சரியானவை தான். வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டதின் அடிப்படையில் அபிவிருத்தி செய்தோம் என்றால் சரிதான். (வாய்மொழி பாகப்பிரிவினை குறித்து வழக்குரையில் சொல்லப்படவில்லை என்று பிரதிவாதி தரப்பு

ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்படுகிறது) நான் எதிர்வழக்குரையில் கூட்டாக அனுபவித்துக்கொண்டிருப்பதாகவும், வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்று சொல்லியுள்ளது தவறான சங்கதிகள் என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட வழக்குரை குறித்து எனக்கு தெரியும். அதில் 6-ம் பிரதிவாதி மணி என்பவரும் சேர்க்கப்பட்டதும் எனக்கு தெரியும். அதில் செல்லம்மாள் 10-ம் பிரதிவாதியாகவும் கண்ணம்மாள் 11-ம் பிரதிவாதியாகவும், சந்திரலேகா 12-ம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும். அவர்கள் என் அத்தையின் வாரிசுகள் ஆவார்கள். என்னுடைய சாட்சியத்தில் அவர்களை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. குருவாயி தோட்டம் மற்றும் கொண்டாரெட்டி தோட்டம் ஆகியவை பலரின் கூட்டு பாத்தியத்தில் உள்ளது என்று தவறாக சொல்லியிருக்கிறேன் என்றாலும், சென்னியப்பனும், காளியப்பனும் அந்தச் சொத்துக்களை வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டு அதன் அடிப்படையில் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான அடங்கலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா, சிட்டா தாக்கல் செய்திருக்கிறேன். வாதி சென்னியப்பனின் சொத்துக்களை பொறுத்து எந்தவித பாகப்பாத்திய விடுதலையும் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதியும், வாதியின் சகோதரரும் அவரது தந்தையும், கம்பிளியம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு நிலவள வங்கியில் தாவா சொத்துக்களை அடமானம் வைத்த விபரம் எனக்கு தெரியாது. வாதி தனது சாட்சியத்தின் போது அந்த ஆவணத்தை தாக்கல் செய்த விபரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் வாதிக்கும் பங்கு இருப்பதால் தான் வாதியையும் சேர்த்து வா.சா.ஆ.4- அடமான கடன் பத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் தவறு. நான் 07.10.1998-ல் தாவா சொத்தின் ஒரு பகுதியை சென்னியப்பன் மனைவி கருப்பாயாள், மகள் சுப்பாத்தாள், மகன் கருப்பசாமி ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் சுப்பாத்தாள் வாரிசுரிமை அடிப்படையில் தான் தரப்பினராக சேர்க்கப்பட்டு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். சுப்பாத்தாளின் சகோதரி தான் வாதி ரேவதி என்றால் சரிதான்.ஆனால் ரேவதி வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் கையெழுத்து போடவில்லை என்றல் சரிதான். அவர் பணத்தை வாங்கிக் கொண்டு பதிவு செய்யும் சமயத்தில் வரவில்லை. என்னுடைய எதிர்வாதத்தில் ரேவதி இவ்வளவு

பணம் வாங்கிக்கொண்டார் என்றோ, கிரைய ஆவணத்தில் கையெழுத்து போடவில்லை என்றால் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. இதுநாள் வரை ரேவதி பணத்தை வாங்கிக்கொண்டு கையெழுத்துப்போடவில்லை என்றும், அவரை கையெழுத்துப்போடும்படி சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. அவருடன் பேச்சு வார்த்தை இல்லை. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் ரேவதி பலன் பெற்றுக்கொண்டார்கள் என பின் யோசனை இட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மூலம் என் தகப்பனார் கிரையம் பெறும் பொழுது எனக்கு முழு விபரம் தெரியும் என்றால் எனக்கு கிரையம் நடந்தது தெரியும். அப்பொழுது நான் செல்லவில்லை. என் தகப்பனார் அந்தச் சொத்தை ரூ.90,000/-க்கு கிரையம் பெற்றார். வா.சா.ஆ.5-ல் சொல்லப்பட்ட சின்னராஜ் என்பவர் வாதியின் சகோதரி சுப்பாத்தாளின் கணவர் ஆவார். வா.சா.ஆ.5 ஆவணத்தில் சின்னராஜின் கடனை பைசல் செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் கருப்பசாமி என்கிற கருப்பணன் கடன் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ரூ.78,000/- கடன் தீர்க்கப்பட்டதாகவும், கருப்பாயாள், கருப்பசாமி, சுப்பாத்தாள் ஆகியோர் பிராமசரி நோட்டின் மூலம் ஏற்படுத்திய கடன் வட்டியுடன் தீர்க்கப்பட்டதாகவும் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் ரேவதி பெற்ற கடன் ஏதாவது தீர்க்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ரேவதி தரப்பினர் அல்ல என்பதால் அந்த ஆவணம் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மனைவி சொத்தை விற்று தன் கணவருக்கு கடன் கொடுத்தாக உருவாக்கப்பட்ட போலியான ஆவணம் என்றால் சரியல்ல. வாதிக்கு பாகம் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளும், வாதியின் தாயார் கருப்பாயாள் ஆகியோர் வா.சா.ஆ.5 கிரையத்தை மோசடியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு கண்டுள்ள சொத்தில் வாதியின் பங்கானது எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அ.வ.எண்.108/1999 என்ற வழக்கை ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் வாதி தாவா சொத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தகப்பனார் ஆஜரானார் என்றால் சரிதான். அந்த தாவாவிலும், வா.சா.ஆ.5 பத்திரம் தன்னை கட்டுப்படுத்தாது என்று வாதி ரேவதி சொல்லியுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அந்த வழக்கு பெருந்துறை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வந்தது என்றால் சரிதான். பெருந்துறை சார்பு

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தபோது சொத்தை ஒரு சுப்பிரமணியன் என்பவருக்கு விற்பது சம்பந்தமாக வாதியும், நாங்களும் பஞ்சாயத்து பேசினோம் என்றால் சரிதான். ஆனால் அது இந்த சொத்து சம்பந்தப்பட்டதல்ல. வா.சா.ஆ.8 மேற்படி சுப்பிரமணியத்திற்கு 2006-ம் ஆண்டில் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரம் என்றால் சரிதான்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-S.Indulatha, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.